**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 63/2012**
**C/W. அ.வ.எண். 208/2011**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.10.2025 | | |
| பெயர்: | சீனிவாசன் (DW–3 Cross ) | தகப்பனார் பெயர்: | முனியாண்டி |
| கிராமம்: | செம்மங்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 67/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 17.10.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.55)**

1. நான் செம்மங்குடி ஊராட்சியில் OHT ஆப்பரேட்டராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாலசந்தர் மீது ஒருவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார், ஆனால் அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாலசந்தர் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிவசிதம்பரத்திற்கு எத்தனை மகன்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. சிவசிதம்பரத்தின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. எத்தனை வாரிசுகள் என்றும் எனக்கு தெரியாது. சிவசிதம்பரத்தின் வாரிசுகள் எத்தனை பேர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிவசிதம்பரம் எந்த ஊரில் குடியிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சிவா எந்த ஊரில் குடியிருந்தார் என்றால் கடவாசல் கிராமத்தில் குடியிருந்தார்.

சிவாவிற்கு எந்த ஊரில் குடும்ப அட்டை, ஆதார் அட்டை இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. இந்த வழக்கு சொத்து சிவசிதம்பரம் பெயரில் இருந்ததற்கான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து சிவா பெயரில் உரிமையிலும் அனுபவத்திலும் இருந்ததாக சாட்சியம் நான் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக நான் எந்த ஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் கையெழுத்திட்ட ஆவணம் எந்த ஆவணம் என்றால் பாலசந்தருக்கு சிவாவால் எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம். அந்த ஆவணம் பாலசந்தர் வீட்டில் வைத்து டைப் செய்யப்பட்டது. அந்த பத்திரம் என்பது 20 ரூபாய் பத்திரம், அதனுடன் மேலும் ஒரு தாள் உள்ளது. அந்த பத்திரம் சீர்காழியில் வாங்கப்பட்டது, ஆனால் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்பதுபற்றி தெரியாது. அந்த பத்திரத்தின் 2 பக்கத்திலும் சிவா கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சிவாவை தவிர வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை.

5. அந்த பத்திரத்தில் 4,5 பேர் சாட்சி கையெழுத்து செய்தார்கள், ஆனால் யார் யார் என்ற விபரம் தெரியாது. அந்த பத்திரம் கெடு போட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரம் 22.03.2007ல் எழுதப்பட்டது. அந்த பத்திரத்தில் பாலசந்தர் கையெழுத்து செய்துள்ளார். அந்த பத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை. எந்த ஆவணத்தை பார்த்து பி.வா.சா.ஆ.3 பத்திரம் எழுதப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. பத்திரம் எழுதுவதற்கு வாசகம் யாரும் கூறவில்லை. பாபு என்பவர் சிவாவின் மகன் ஆவார். சிவாவின் மகன்தான் பாபு என்பதற்கான ஆவணத்தை நான் பார்த்ததில்லை. பாபு கடவாசல் ரஹ்மானியா உயர்நிலைப்பள்ளியில் படித்த

விபரம் பற்றி எனக்கு தெரியாது. பாபுவின் தகப்பனார் பெயர் சின்னையன் என்பதை நான் தெரிந்துகொண்டு வழக்கிற்காக சிவா என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவா திருமணம் செய்துகொள்ளவில்லை என்றாலும் அவருக்கு வாரிசு இல்லை என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. கலா என்பவர் சிவாவின் மனைவி இல்லை, சின்னையன் மனைவி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 பத்திரம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் வழக்கினை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் பாலசந்தர் கேட்டுக்கொண்டதற்கிணங்க போலியான ஆவணத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.18)**